உ

# மாத்தளையின் மாசிமகம்

## (கவிதை தொகுதி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெளியீடு : இந்துகலாசார பேரவை - மாத்தளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



கற்பக விநாயகர் துணை

ஓம் பூர் புவ ஸுவஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோநு ப்ரசோதயாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் தரவுகள்

108 அடி நவகளச இராஜகோபுர நாயகி அம்பிகையின்
மாசிமக மகோற்சவத்தை சிறப்பித்து
பாடிய கவிதை தொகுப்பு.

# நூலின் தலைப்பு

மாத்தளையின் மாசிமகம்
(கவிதை தொகுதி)


வெயீடு - மாத்தளை இந்து கலாசார பேரவை

வருடம் - சர்வாரி வருடம் 25

அச்சுப்பதிப்பு - **SUDHA PRINTERS**

கணினி வடிவமைப்பு - சரவணப்பெருமாள் கவிஷினி

தொகுப்பாசிரியர் - கலாபூஷணம் மாத்தளை பெ.வடிவேலன் (BA ed)
வே.தங்கராஜா (SLPS-1ஆரம்ப கல்வி இணைப்பாளர்)

முகவரி - 6/8 கோவின்ன, கிவுல, மாத்தளை.
(0774847615)

ஆக்கத்துணையும் அனுசரணையும்


## பொருளடக்கம்

**மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான
சர்வாரி வருடம் 2021 ஆம் ஆண்டு மாசிமக
மகோற்சவத்தை முன்னிட்டு
நவ கவிஞர்கள் பாடிய நூலின் தொகுப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வாரி வருடம் 2021 ஆம் ஆண்டு கொடியேற்றம்

# மாத்தளை மாரியின் திருக்கோயிலில் இன்று அரிமா கொடியேறுது.



**கலைமாமணி மாத்தளை**
**பெ.வடிவேலன்**

நோத்மாத்தளையை பிறப்பிடமாக கொண்ட இவர் ஆசிரியராகவும், கலாசார அமைச்சியில் அதிகாரியாகவும் பணியாற்றியவர். நான்காவது மலையக சிறுகதை போட்டியில் முதலாம் இடம் பெற்றவர். முத்துமாரியம்மனை ஆய்வு செய்து இருபது நூல்களை வெளியிட்டு உள்ளார். சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, நாட்டுபுறவியல் ஆய்வு என்பவற்றில் மலையகத்தில் முதன்னை வகிக்கின்றவர். மாகாண சாகித்ய விருதுகளை பெற்றவர். இலங்கையிலும் கடல் கடந்த நாடுகளிலும் பல விருதுகளை பெற்றவர். கலாபூ'ணம், கலைமாமணி ஆகிய விருதுகளை இலங்கை அரசு வழங்கி கௌரவித்துள்ளது.இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைமாமணி பட்டம் பெற்றவர்.

அம்பிகையின் அருள் பொழியும் அழகுத்திருநகராம் மாத்தளையில்
அன்னை முத்துமாரியின் திருக்கோயில் கொடியேற்றம் காணுது
மலையகத்தின் தலைவாசல் மாத்தளை மாநகரில்
அன்னை முத்துமாரியின் அரிமா கொடியேறுது.

மாமலைகள் புடைசூழும் பன்னாகப்பதியில்
மாசிமகத்திருவிழா மகோற்சவம்காண அரிமா கொடியேறுது
அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி அம்பிகையின்
மாசிமக மகோற்சவம் விழாக்கோலம் காணுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுடிச்சுக்கள் ஆறு ஆதாரங்கள் அட்சயநிலையில் நடுநாடியில்
ஆத்மாவின் ஜீவகுண்டலிணி உயர் சக்தியை எழுப்பி யோக நெறியில்
நடுநாடியான சுழுமுனையைக்கொண்டு விழாக் கொடியேறுது.
விண்ணோரும் மகிழ்ந்தே மலர்மாரி பொழிகின்றனர்.

பதியாகிய கொடிமரத்தில் பிணைந்த பசுவென்னும் கொடிச்சீலை
பாசம் என்னும் தர்பக்கயிற்றுடன் மேலோங்கி கொடியேறுது
பாச மாயம் நீங்கியே அம்பாள் அருள் பெற்றிட கொடியேறுது
பாரெல்லாம் மகிழ்ந்தே பரவசத்தில் மூழ்கித் திளைக்கின்றது.

## தோரணம்

பொங்கு நதி கங்கைதனை சிரமனிந்து
மங்கை உமைக்கு இடபாகம் அளித்த ஈசன்
கருணை மழை பொழியும் எங்கள் மலையகத்தில்
பூரணை நிலவாய் அருள் ஒளி வீசும்.

மா மலைகள் சூழும் மாத்தளையில் கோயில் கொண்ட
மாரியின் திருக்கோயிலில் மாசிமகம் சிறக்கின்றது
மழையின்றி பயிரில்லை பயிர் இன்றி உயிரில்லை
மாரியே நின் அருள் மழை பொழிந்தே அபயம் அழித்திடுவாய்.

காளிந்தி நதியில் அவதரித்தே
காசினியில் எங்கும் கோயில் கொண்டே
அன்னை உமையின் அவதாரமேயான முத்துமாரி
மாத்தளையில் எழுந்தருளியே மக்களை காத்தருள்கின்றாள்.

உச்சி மலை சரிவில் உதயத்து பனி குளிரில்
பச்சைத் தளிர் பறித்தே பறிதவித்தே ஏங்கி நின்று
சக்தியே துதிக்கின்றார் சங்கரியே காத்தருள்வாய்
சர்வலோக நாயகியே சம நீதி வேண்டுமம்மா.

நவதல நவகலசம் கொண்ட நாயகியே
நவமான கவிஞர்கள் நவமணிகளேனே
நாயகியே உன்னை பாடி பணிகின்றார்
நல்லருள் தந்தே காத்தருள் புரிவாயம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசிமகத்தாயி, மாத்தளை முத்துமாரி!



நல்லராஜா அருளானந்தம்
(கிட்டங்கி ஆனந்தன்)
பிரதிக்கல்விப் பணிப்பாளர்- (ஓய்வு)
M.A, M.Ed, S.L.P.S, S.L.E.A.S
P.G.D.E (MARIED)

கல்முனை சேனைக்குடியிருப்பு, கிட்டங்கியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்வியை சேனைக்குடியிருப்பு கணேச மகாவித்தியாலயத்தில் தொடங்கி, உயர் கல்வியை கல்முனை பாத்திமாக் கல்லூரியில் முடித்து, பட்டக்கல்வியை பேரதனை பல்கலைக்கழகத்தில் முடித்தவர்.

மாத்தளையை வாழ்விடமாக கொண்டவர். ரத்தொட்டை இந்து ம.வி. ஆசிரியராகவும், நத்வத்தை வித்தியாலயத்தில் அதிபராகவும், பின் உதவிக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளராகவும் இருந்தார். கவிதை, கட்டுரை, விமர்சனம், பேச்சாளர் என பன்முகப்பட்டவர். கல்வியமைச்சின் கீழ் பாடப்புத்தக ஆக்கக் குழுவில் இடம் பெற்றார் கல்வி பொது சாதாரண தரம், கல்வி பொதுப் உயர் தரம் புத்தக ஆக்கத்தில் இடம்பெற்றவர்.

பரமளித்த பரமனுக்கு நாயகி
புரமெரித்த புரவலனுக்கு நாயகி
நரருக்கும் உலகத்து நாயகி
நானில மக்களுக்கெலாம் நாயகி!

மாத்தளையில் மாசிமகம் என்றால்
மானிடருக்கும் மனமெல்லாம் மகிழ்ச்சி
தானவர்க்கு தானம் கொடுக்கும் மகிழ்ச்சி
வானவரும் பூமழை பொழியும் மகிழ்ச்சி

கொரோனா கொன்றொழிக்கும் வேளையில்
கொலைப் பயமின்றி மாசிமகம்
கொடிய கொரோனாவையும் கொன்றழிக்கும் மாரியவள்
கொலைக் களம் கண்டிடும் மாரியவள்!

சரணம் என்று மாரியைத் தொழுவோம்
கரணம் என்று அவள் சரணமளிப்பாள்
தரணி யெல்லாம் தாயவள் காப்பாள்
பரணில் நின்று பாதம் போற்றுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சரதம் பஞ்சமாபாதகம் போக்கும்
தஞ்சம் என்று வந்தோருக்கு
பஞ்சமின்றி புரப்பாள்- அந்த
கஞ்சமகளின் கால் பணிவோம்

தேரோடும் மாத்தளையில் தேரோடும்
பாரோடும் மக்களின் தேரோடும்
தாயாரும் வடம் பிடிப்பார்
தங்கையரும் வடம் பிடிப்பார்!

காளையரும் வடம் பிடிப்பார்
கண்டு மனம் மகிழ்ந்து- வேறு
இனத்தவரும் வடம் பிடிப்பார்
சார்ந்தோரும் வடம் பிடிப்பார்

அழகு மலையைப் பார்த்து
அண்ணாந்து பாட்டு பாடுவர்
பண்ணாமத்து ஊர் அழகுபெறும்
பார் போற்றும் தேரைப் பார்த்து.

உலகத்து மாரியவள் உள்ளம் குளிரும்
உண்மை பக்தருக்கும் உள்ளம் குளிரும்
பண்ணாமத்து மக்களுக்கும் உள்ளம் குளிரும்
மண்ணகத்து மக்களும் உள்ளம் குளிரும்

மாரியவள் அழகை என்னவென்பேன்
மனதை மயக்கும் அழகென்பேன்
எங்களைக் காக்க வேண்டுமம்மா
எங்கள் உயிர் நீதான் தாயே!

மாரித்தாயே மாரித்தாயே மாரித்தாயே
மனம் மகிழ வைப்பபயம்மா மாரித்தாயே!
மாரித்தாயே மாரித்தாயே மாரித்தாயே
மக்களை காத்தருளும்மா மாரித்தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தர் உயிர் காக்க மாத்தளையில் மாசிமகம் வேண்டும்



மாத்தளை தங்கா
SLPS-1
ஆரம்ப கல்வி இணைப்பாளர்

ஆரம்ப கல்வியை பாக்கிய வித்தியாலயத்திலும், கிறிஸ்து தேவ வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கந்தசாமி தமிழ் வித்தியாலயத்திலும் மாத்தளை இந்து தேசிய கல்லூரியிலும் பயின்றவர்.

பாடசாலை நாட்களில் பாடசாலை மட்டம், மாகாண மட்டம், அகில இலங்கை மட்டம் ரீதியிலான கலை, இலக்கிய போட்டிகளில் பல இடங்களை தனதாக்கிக் கொண்டார். பாடசாலை நாட்களில் இந்திய கவிஞர் கண்ணதாசன், சாலை இளந்திரையன் அழகப்புரி அழகப்பன் இணைந்து வெளியிட்ட "நாங்கள் படைப்பாளிகள்"என்ற கவிதையை வழங்கியவர்.

1986 களில் ஆசிரிய பணிக்கு உள்வாங்கப்பட்டு படிப்படியாக சேவையில் 35 வருடக்காலப்பகுதியில் அதிபர் தரம்-1 கொண்ட உத்தியோகத்தராக பதிவியேற்றம் பெற்றார்.15 வருட காலம் மா/பம்பரகலை த.வி அதிபராகவும் 15 வருடக்கபலம் மா/ பிடக்கந்த த.வி அதிபராகவும் கடைமையாற்றி தற்போது மாத்தளை கல்விப் பணிமனையில் ஆரம்ப கல்வி இணைப்பாளராகவும் பணி புரிகின்றவர்.

மலையக பகுதி பாரம்பரிய கலை கலைஞர்களை இனங்கண்டு பிறப்பு தொடக்கம் இறப்பு வரை (தாலாட்டு, ஒப்பாரி) மலையக பாரம்பரியங்களை மேடையேற்றி மலையக கலைகளை மீள் பரிணாமம் செய்தவர. அதற்கு இவருக்கு 2004 ம் ஆண்டு மலையக பாரம்பரிய கலைகளுக்கான சாகித்திய விருது கிடைத்தது.

1982 முதல் மாத்தளை இந்து கலாசா பேரவையின் செயலாளராகவும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் 1992,1995,2007,2010. இரு தடைவகள் அங்கத்தவராகவும், உப செயலாளராகவும் செயல்பட்டு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் ஆரம்ப பாடசாலையின் ஆரம்ப கர்த்தாக்களின் ஒருவராகவும் செயல்பட்டமை குறிப்பிடத்தக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் கவிதை ஆக்கம் காலத்தின் கண்ணாடியாக காணப்படும்.

1975 - தோட்ட தொழிலாளர்கள் (நாங்கள் கொழுந்தின் படைப்பாளிகள்)

2004 - சுனாமி (கடலம்மா ஏன் இந்த சீற்றம்)

2020 - கொரோனா (மாந்தர் உயிர் காத்து மாத்தளையில் மாசிமகம் வேண்டும்)

உன் படைப்பின் உயிரினங்கள்
உயிர் நீக்கும் தருணமிது
உயிர் காப்பாய் உத்தமியே
உலக மக்கள் உயிர் காப்பாய்.

உலகை நீ படைத்தாய்
உயிரை நீ படைத்தாய்
உணவை நீ படைத்தாய்
உண்பதற்கு நியதி வைத்தாய்

ஆழப் பூமியில் வேர் கிழங்கு
புழு பூச்சிக்கு
ஆராய்ந்து உண்ணத் தானியங்கள்
ஆறறிவுக்கு
எட்டாத தூரத்தில் காய் கனிகள் தாவும்
விலங்கிற்கு
என வகுத்திட்டாய் இயற்கை
துணைக்கொண்டு
உன் படைப்பின் பசி போக்க பக்குவமாய்
நீ படைத்திட்டாய்
எம் பசி தீர்த்தோம் பாராமல்
அனைத்தும் எமக்கென்று
நாம் பிழை என்பதை உணர்த்திட்டாய்
“கொரோனா” நோய் கொடுத்து
கடும் பிழை உணர்ந்தோம்
காத்திடு தாயே மனமிரங்கி
காவு கொள்ளும் நோயிலிருந்து.
அதற்கு
பஞ்சரத பவனி வேண்டும்
பக்தர் குழாம் சூழ வேண்டும்
மஞ்சு தவழ் மாத்தளை மண்
மாசிமகம் காண வேண்டும்

சித்தர தேர் பவனி வேண்டும்
சிறப்பிக்க உன் வருகை வேண்டும்
சீற்றம் நீ தணிய வேண்டும்
சீராக தேர் ஐந்தும் நகர வேண்டும்
மீண்டும் மாத்தளை மண் மாசிமகம்
காண வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூலோக சுவர்க்கமிது



பெரியண்பிள்ளை லெ.கவிறரசன்
(மாத்தளை கவி)

என்பதுகளில் நடுப்பகுதியிலிருந்து தனது கவிதையால் தமிழுக்கும் இலக்கியத்திற்கும் அழகு சேர்த்தது கொண்டிருக்கும். இவர் இலங்கை மின்சாரத்துறை உத்தியோகஸ்தரும் சமூக ஆர்வலரும் ஆவார்.

மாத்தளை கவி என்ற பெயரில் முகநூலில் கவிதை எழுதும் இவருக்கு 2018 ஆம் ஆண்டு சிறந்த கவிஞர் என்ற கௌரவப் பட்டமளித்து முகநூல் கவிஞர் சங்கம் பெருமை சேர்த்துள்ளது. உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை மாத்தளை, சாகிரா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்ற இவர் வர்த்தக பட்டதாரியாவார். வாஸ்த்து மற்றும் ஜோதிடத்தை முறையாக பயின்று அதை ஆராய்ச்சிக்குட்படுத்தியுள்ளதோடு மக்களுக்கு இதை முறையாக கொண்டு சேர்ப்பதில் மிகவும் அக்கறையோடு செயல்படுகிறார்.

பல வருடங்களாக மாத்தளை பாக்கியம் தேசிய பாடசாலையில் அபிவிருத்திச் சங்க செயலாளராகவும் பொறுப்பேற்று மாத்தளை தமிழ் சமூகத்திற்கு அரும்பணியாற்றியுள்ளதோடு, சுது கங்கை ஸ்ரீ ஏழுமுகக்காளியம்மன் திருக்கோயிலில் 2018 ஆம் வருடம் மகா கும்பாபிஷேகத்தின் போது ஸ்ரீ ஏழுமுகக்காளியம்மனின் வரலாற்று பதிவை ஆய்வுக் கட்டுரையாக தொகுத்து கும்பாபிஷேக மலரில் பதிவு செய்ததன் ஊடாக அவ்வாலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

நெஞ்சினிலே நிறைந்து
நினைவுகளில் கலந்து- முன்
ஜென்ம வினை தீர்க்கும்
நாயகனே விநாயகா
அன்னைக்குப் பாட்டெழுத
அடியெடுத்தேன் துணை வருவாய்.

தெய்வங்கள் வாழ்த்துரைக்க
தேவதைகள் வடம் பிடிக்க
மெய்சிலிர்த்து நான் பாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேரேறி வருவாள் எங்கள்
தெய்வ முத்துமாரி
முத்தல்ல அவளெங்கள் முழு தெய்வம் பாரீர்.

தாய் தமிழும் அழகானது
தாயை உன்னை பாட
நோயகன்று போனதுவே
தாய் புகழைக் கேட்டு
காய் கனிந்து கனியானது
உன்னழகை கண்டு
பாடுவதற்கு வார்த்தையில்லை
வாழிய பல்லாண்டு.

விண்ணோர்கள் வியந்து நிற்க
மண்ணோர்கள் மகிழ்ந்து நிற்க
மாத்தளையில் வந்தமர்ந்த
ஸ்ரீ முத்துமாரி- அம்மன்
எத்தனையோ புண்ணியங்கள்
செய்திருக்க வேண்டும்
நான் பாடவுன் புகழை.

அகஸ்த்தியர் நடந்து போன
அழகுமலை அரண் அமைக்க
அழகுநதி கிளைபரப்பி- உன்
அழகுபாதம் தழுவ
அரண்மனையில் வீற்றிருக்கும்
அம்பிகையுன் புகழ் வாழ.

தென் மதுரை தேசம் விட்டு
ஸ்ரீலங்கம் தேசம் வந்து
மாத்தளையில் அமர்ந்த போது
முன்னதாக வந்து நின்று
வரவேற்று வாழவைத்த
எங்கள் குலசாமி-அம்மன்
எங்கள் குலசாமி.

பார் போற்றும் பஞ்ச ரதம் பார்ப்பவர்கள்
நெஞ்சிலிதம்
தேரழகு மாத்தளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவெங்கும் பக்தரலை
ஊர் கூடி வடமிழுக்க
உள்ளே எங்கள் தெய்வமல்லோ.

சித்திர தேரைந்தும்
சீராக நகர்ந்து வர
மூத்தவனே விநாயகா
முன்னால் வழிகாட்டி வர
இளையோனும் துணையோடு
அண்ணாவைப் பின்தொடர

அழகு ரதம் ஏறி
அம்மையப்பன் அடுத்து வர
ஊர் குறைகள் தீர்த்து வர
ஊர்காவல் சாமியெங்கள்
சண்டேஸ்வரி நிறைவு செய்ய
வைகுண்டம் போனது போல்
பரவசத்தில் பக்தர்கள்.

பூலோக சுவர்க்கமோ
நர்த்தன நாதனின்
கைலாய தவமலையோ
ஸ்ரீ விஷ்னு நிலைபெற்ற வைகுண்டமோ இது
வியந்து போகிறேன்-முன்
விணையின் பயனன்றோ
பிறப்பெடுத்தேன்
பண்ணாகாம பதியினிலே.

மாத்தளை கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளையில் மாசிமகம்



**Dr.அமிர்தலிங்கம் தத்துவசுதன்**

B.S.M.S, M SC(Food & Nutrition)

இவர் யாழ்பாணம் நாவற்குழியை பிறப்பிடமாக கொண்டவர்.யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும் பேராதனை பல்கலைகழகத்தில் பட்டப் பின் படிப்பையும் தீர்த்தி செய்துள்ளார்.அரச சேவையிழல் இணைந்த நாள் முதல் மத்திய மாகாணத்தில் சேவையாற்றிவரும் இவர் தற்போது மாத்தளை வடக்கு ஆயுர்வேத தள வைத்தியசாலையில் ஆயர்வேத வைத்தியராக பணியாற்றுகிறார். நாடகத்துறையில் அனுபவமுள்ளதுடன் பாடல்கள் கவிதைகள் எழுதுவதுடன் இந்துசமய ஆன்மிக கலை இலக்கியங்களை வளர்ப்பதிலும் ஈடுபாடு கொண்டவர்

மாசிமக நன்னாளில் மலர் சூடி நின்றாய்
மலரோடு மலராக மலர்மீதமர்ந்தாய்
நிலவொளியில் நிலவாக மண்ணிலே நடந்தாய்
தேரேறி தென்றலாய் வீதி வலம் சென்றாய்

தாமரை மலரிலே சங்காய் தவழிந்தாய்
தட்சனின் மகளாக தரணியில் வளர்ந்தாய்
ஈசனின் மனையாக மணக்கோலம் கண்டாய்
குங்கும திலகமாய் குலங்காத்து நின்றாய்

என் தாய்க்கும் அவள் தாய்க்கும் உயிர் தந்த எம்தாய்
அவள் தாய்க்கும் தந்தைக்கும் அருள் தநத எம்தாய்
முன்னோருக்கும் இன்னொருக்கும் நல்வாழ்வு தந்தாய்
பித்ருக்கும் துயர் தீர்த்து நற்கதியில் சேர்த்தாய்

விழுகின்ற விதையிலே மரமா யிருந்தாய்
உருவான கருவிலே உயிரா யிருந்தாய்
பெய்கின்ற மழைநீரில் கடலா யிருந்தாய்
சுழல்கின்ற உலகிலே செயலாயிருந்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாத அழுக்கறை தீயினில் மாய்த்தாய்
செல்லாத சிறுக்கரை ஆணியில் தைத்தாய்
பொல்லாத புலையரை இல்லாதொழித்தாய்
பொல்லாதவை போக்கி தேவரை காத்தாய்

பொய்ப்பிளை விலக்கிடும் மெய்யறிவு தந்தாய்
பொய் வசன கருத்துரை புறந்தள்ள வைத்தாய்
பொய்வேசம் போடாத பொன்னெறியில் வைத்தாய்
மண்வாசம் மாறாத நன்னெறியில் வைத்தாய்

மனம் வருத்தி துதிப்போர்க்கு பாவங்கள் தீர்த்தாய்
மனம் இரங்கி வாழ்வோர்க்கு புண்ணியம் சேர்த்தாய்
மனிதராய் வாழ்வற்கு கண்ணியம் கோர்த்தாய்
புனிதராய் வாழ்ந்தோர் அடைக்கலம் தந்தாய்

ஞானமும் கல்வியும் கடலாய் நியைந்தாய்
ஆற்றுலம் திறமையும் அளவிலாத அளித்தாய்
செல்வமும் சிறப்பும் செழித்தோங்க செய்தாய்
முயற்சியும் பயிற்சியும் முன்னெற வைத்தாய்

இறை வழியில் துதித்திடவே திருக்கோவில் கொண்டாய்
மறை வழியில் நினைத்திடவே மனக்கோயில் வந்தாய்
மாத்தளை மண்ணிலும் மலர்க் கோயில் கொண்டாய்
மாசிமக திருநாளில் அருள் தூவிச் வந்தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி நீ வந்திடுவாய்



**திருமதி.சியாமளாதேவி வடிவேலன்**

இவர் சங்கீதம் டிப்ளோமா (இந்தியா), பயிற்றப்பட்ட ஆசிரியராக பல பாடசாலைகளில் கல்வி கற்பித்து இறுதியாக பாக்கியம் தேசிய பாடசாலையில் சங்கீத ஆசிரியராக கடமை ஆற்றி தற்போது ஓய்வு நிலையில் உள்ளார். மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் திருப்பள்ளி எழுச்சி, அருள்மிகு முத்துமாரியம்மன் திருவடி போற்றி, கதிர்காம முருகன் திருப்பள்ளி எழுச்சி, கதிர்காம முருகன் திருவடி போற்றி, காவடி சிந்து, கதிர்காம முருகன் பக்தி பாடல் ஆகிய இருவெட்டுகளை இசையமைத்து வெளியிட்டு உள்ளார். இலங்கை கலாசார அமைச்சியில் இயங்கும் கலாசார பேரவை இவரது கலை இலக்கிய பணிகளை பாராட்டி கௌரவித்துள்ளது. அறநெறி பாடசாலைகளில் அறநெறி பாடசாலைகளுக்கான பன்னிசை கருத்தரங்குகளில் செயல் முறை பயிற்சியும் நெறி முறையும் நிகழ்ததுக்கின்றார். தேசிய மரபுரிமை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சியினால் பிரதீமா விருது பெற்றுள்ளார்.

**விநாயகர் துதி**

ஓங்கார ரூபனே கஜமுகனே
ஒற்றைக் கொம்பனே கணபதியே
ஒன்புகழ் பாடித்தினம் தொழுவேனே
ஒரு நாளும் உனை மறவாதிக்க
ஒருவரம் தந்தருள்வாயே!

மாத்தளை பதிவாழும் மாரியம்மா — அம்மா
மனங்குளிர எங்கள் முன்னே வாருமம்மா
சங்கரியே சாம்பவியே வாருமம்மா-அம்மா
வந்திருக்கும் தொண்டரை நீ பாருமம்மா.

ஓங்காரி ஸ்ரீதரியே முத்துமாரி
ஓயாத உன் கருணை அருட்ளாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாசி தந்திடும் நாமகள் நீயே
உன்பாதம் உமை உனையே நம்பிவந்தேன்.

சங்கரனை எண்ணி நீ நோன்பிருத்து
மங்காத மாங்கல்யம் பொற்றவளாம்
காருண்ய தாயே கலாவல்லி- மாரி
காத்திருப்போம் காலமெல்லாம் உனைநம்பி.

ஐங்கரனை பெற்றெடுத்த ஆதி சக்தி
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்கு
பொன்னரசி புகழரசி முத்துமாரி
பொறியரவு தாங்கிவரும் புவனேஸ்வரி.

ஆறுமுகவேலனின் அன்னை நீயே
ஆதரித்து காத்தருள்வாய் முத்துமாரி
பொற்கோவில் கொண்டவனே முத்துமாரி
பூவிருந்த வேதவல்லி நீயேயம்மா.

அசுரக்குணம் யாவும் அழிப்பவளே
அரியை உடைய காளிதாயே
அல்லல் அறுப்பதற்கு அருளுமம்மா
பூமணியே மாமணியே தாயவளே.

கல்வி வீரம் செல்வம் செழிக்க அருளுமம்மா
காசினியில் வேற்றுமையை மாற்றுமம்மா
பாட்டுடை தலைவியே பராசக்தியே
பண் இசைத்து உன்புகழை பாடவேண்டுமே.

வேப்பிலையை அணிந்தவளே மாரியம்மா-எங்கள்
வேதனையை தீர்த்துவிட ஓடிவாம்மா
பால் குடங்கள் சுமந்து வந்தோம் பார்த்திடம்மா-உன்
பதமலரே தஞ்சம் என்று போற்றுவோமம்மா.

நாதகீத கனாகலா நடனசக்தியே
நாடிவந்த பக்தர்களை காக்கும் சக்தியே
கோயில் கொண்டு குடியிருக்கும் குலதெய்வமே — எமை
குலமகளாய் வாழவைக்கும் அருள் தெய்வமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம் முதல் ஆன ஆனந்த ரூபியே
அன்பு வடிவான அம்பிகையே
உம்பார்க்கும் இம்பார்க்கும் வாழ்வுதரும் பதம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தியே.

புரமெரித்தான் புறமிருக்கும் பரமேஸ்வரி
மூவுலகை காக்கும் ஜெகதீஸ்வரி
சக்தியென்னும் இன்பமுள்ள பொய்கையிலே – மாரி
சக்தியமாய் வாழும்சக்தி நீயேயம்மா.

அளிக்கும் நல்செந்தமிழ் தாரணியே
கலைத்தமிழ் தந்திடும் கலைவாணியே
அமுதீசர் அகலாத அபிராமியே
அருள்மழை பொழிந்திடுவாய் ஆனந்தியே.

பூரணி நாரணி லோகேஸ்வரி
மூவுலகை ஆளும் பூமாதேவி
அடைக்கலமே தந்துநீயும் எம்மை ஆதரி
ஆதரிப்பார் உன்னையன்றி வேறு யார் இங்கு.
ஆதிசிவன் பத்தினியாய் ஆனவளே – அவர்
பாதியென அகிலத்தையே ஆள்பவளே
கங்கையை சுமந்தவனின் நாயகி நீயே – எங்கள்
நெஞ்சில் நிறைந்த கங்கையம்மனே.

விண்ணும் புவியும் புனலும் கனலும்
எங்கும் நிறைந்தது உன் சக்தியம்மா
விண்கண்ட தெய்வங்கள் பல கோடி ஆனாலும்-மாரி
கண்கண்ட தெய்வம் நீயே அம்மா.

கேதீஸ்சரத்தில் கௌரியம்மா
முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகையே
திருமலை ஆளும் மாதுமையம்மா
மாத்தளையில் முத்துமாரி நீயேயம்மா

பன்னகாகம் என்னும் உறையூரில்
நவதள இராஜபோபுர கோயில் கொண்டு
வீற்றிருக்கும் வீரசக்தி முத்துமாரி – எங்கள்
வினைகளெல்லாம் தீர்க்கும் முத்துமாரியம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர கொடிச்சீலை ஏற்றும்போது
சீர்வரிசை எங்கும் நிறைந்ததம்மா
சீராக நீயும் ஆரோகணித்து
சிறப்பான பூஜையை ஏற்றுக்கொள்வாய்.

தினம் தினம் உன் பூஜை கண்டு மகிழ
ஆயிரம் கண்கோடி வேண்டுமம்மா
அல்லும் பகலும் உனை துதித்து
ஆடிப்பாடி மகிழ்வோமம்மா.

வண்ண பட்டுடுத்தி தேரேறி- மாரி
மாசிமகத்தில் நீ வருவாயம்மா
எட்டுத்திசைகளையும் ஆள்பவளே- அம்மா
ஈஸ்வரியே என்தாயே மாரியம்மா.

கூவி அழைக்கின்றோம் கேட்கலையோ- தாயே
கல்லேதான் உன்மனமும் கரையல்லையோ
மனமிரங்கி மண்ணுயிரை காத்திடவே
மகராசி மாரி நீ வந்திடுவாய்
மாத்தளை மாகராசி நீ வந்திடுவாய்
மாத்தளை முத்துமாரி நீ வந்திடுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைத் தேர் என்னும் முத்திரை



## பொன்னுதுரை பிரகாஷ்

தனது ஆரம்ப கல்வியை மலைமகள் த.வி தெல்தோட்டை மாத்தளை கந்தசாமி த.வி, இந்து மகா வித்தியாலயத்திலும், தொடர்ந்து தரம் 7 முதல் 13 வரை கண்டி புனித அந்தோனியார் கல்லூரியிலும் கல்வி கற்றவர். கம்மடுவ தமிழ் வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக தனது கல்விப்பணியை ஆரம்பித்து நாவுல நாமகள் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராகவும், நாவுல கல்வி காரியாலயத்தில் கோட்டகல்வி பணிப்பாளராக சேவையாற்றினார். பின் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் பிரதி அதிபராகவும் தற்போது மாத்தளை கல்வி காரியாலயத்தில் ஆங்கில பாட அதிகாரியாகவும் சேவை புரிகிறார்.

கலை, இலக்கியம்,சமயம் ஆன்மீக சேவையிலும் தனது பங்களிப்பை தொடர்கிறார். மாத்தளை சைவமகா சபையின் அங்கத்துவராகவும் முன் நாள் தலைவராகவும், முன்னாள் தலைவராகவும், மலையக சமாதான குழ அரசாங்க பிரதிநிதியாகவும் அங்கத்துவம் வகித்து சமூக சேவையாற்றுகிறார். எழுத்து துறைக்கு ஹைக்கூ கவிதை, புதுக்கவிதை பாடல் வரிகள் எழுதுவதோடு பல இசை நிகழ்ச்சிகளில் பாடி உள்ளார். இசை மற்றும் கல்வி துறை சம்பந்தமாக நான்கு நாடுகளுக்கும் சென்று வந்துள்ளமை விசேட அம்சமாகும்.

மாத்தளையில் ஆகாய விமானம்
மாத்தளையில் அம்பாள் கானம்
சித்திரை தேர் என்னும் முத்திரை பதிந்த
மாத்தளை முத்து முத்துமாரியம்மா
ஐந்தோடு ஆறல்ல ஐந்து இரதங்களோடு
ஆறாய் பொங்கிடும் ஜனக்கூட்டம்......

பலூன் காரனை சுற்றி
சிறுவர் கூட்டம்....
புகையிரதம் ஓட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிப கூட்டம்....
நட்சத்திரங்களை நறுக்கென்று
கொய்து நாரிலே கோர்த்து
நகரை அலங்கரித்தனரோ?
பூஜை தட்டேந்தி நிற்கும்
எம் குல விளக்குகளின்
கண் கரைக்கீடாகுமோ...!?
வாசல் தோறும் கோலங்களை
கடக்கும் மேள தாளங்கள்.
காவடி கரகாட்டம்
கானத்தோடு பக்கதர் கூட்டம்
விளிகள் அள்ளித்தரும்....
மொழிகள் பேசிட உள்ளம்
மகிழ்ச்சி குதூகலத்தில்
மக்கள் வெள்ளம்
வேகாத வெயிலிலே
மழையிலும், வெயிலிலும்
கடைசி வரை
வடம் பிடிக்கும் அடியார்கள்
வேல் குத்தி பறவைக் காவடி
கால் மிதித்து தீக்குளிப்பு
கைகளிலே தீச்சட்டி
பக்திபரவசம்
அம்மனுக்கு அன்புப்பூஜை
பாற்குடத்தில் அபி'ேகம்
பச்சை சாத்த மரிக் கொழுந்து
கற்பனை எச்சங்களாகி...
கண்ணுக்குள்ளே நிற்குதம்மா
கொரோனா பெருந்தொற்று
நிரந்தர தடையல்ல
இரதமேறி வருவாய் நீ
பஞ்சரத பவனியிலே...
மா... தலை அம்மாளே
மாத்தளை வருவாயே
சித்திரத்தேரேறி விரைவில்
வருவாயே...காட்சி தருவாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்



**மரதன் கிருஷ்ணன்**
**மாத்தளை**

நோர்த் மாத்தலையை பிறப்பிடமாகவும் வறக்காபொலையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் கவுடுபெலல்ல கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம்இ மாத்தளை விஜய கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பக்கல்வியையும் கொழும்பு பல்கலைகலகத்தின் தனது பட்டபடிப்பையும், நாவல திறந்த வெளி பல்கலைகலகத்தில் தனது பட்ட மேற்கல்வியையும் பெற்றவர்.

கேகாலை சாந்த மரியால் தமிழ் வித்தியலயத்தில் இருபது ஆண்டுகளாக அதிபராக கடைமையாற்றி ஓய்வு பெற்றவர். நாடகத்துறையில் ஆர்வம் கொண்ட இவர் பல வெற்றி நாடகங்களை மேடையேற்றியவர். "பாலைவனத்தில் தூறல்" என்ற நாடகம் தேசியரீதி போட்டியில் முதல் பரிசை பெற்றது.

கவிதை, கட்டுரை விமர்சனம் ஆகிய துறைகளில் பன்முக ஆளுமைக்கொண்ட இவர் மலையக சமூக முன்னேற்றத்திற்கு பல்வேறு வகையில் சேவையாற்றி வருகின்றார்.

ஊர் கூடி இழுக்கும் தேரல்ல இது
உலகம் சேர்ந்து இழுக்கும் மாத்தளை தேர்
ஒரு கறுப்பு ஜீலையில் கவி தொற்றி
மாசியில் வேர் விட்டு மலர்ந்த மந்திர தேர்

கடல் கடந்த அன்பர் வடம் பிடிக்க
காத்திருக்கும் சுந்தரத் தேர்
புலம் பெயர்ந்த தமிழ் உறவின்
நலம் பேணும் உறவுத் தேர்

தமிழும் சைவமும் தளைத்தோங்க
வரம் பெற்றோர் உரை கேட்கும் வண்ணத் தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழுத்து இலக்கியத்தை நயம்பட
இயம்பும் இன்பத் தேர்

பாவை நோன்பிலிருந்து பூவையர்கள்
பட்டுத்து பொட்டிட்டு பூச்சூடி
தீ வனமாய் திசைகள் தோறும், வடம் பிடிக்க
பவ்யமாய் காத்திருக்கும் கண்ணீர்த் தேர்.

பாரெங்கும் திருக்கோயில் பக்தனுக்கு அருள் பொழிய
ஊரெல்லாம் தேரோடும் உயர்ந்த நலம் ஓங்குவிக்கும்
எத்தேர் எங்கிருந்தும், அந்தமில்லா அம்பிகைக்கு
அகத்தில் பூத்திருக்கும் அன்புத் தேர் இத் தேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளையில் மாசிமகம்



**நல்லையா சந்திரசேகரன்**

அதிபர் ஸ்ரீ குமரன் ஆரம்ப பாடசாலை, இறத்தோட்டை

இறத்தோட்டை காலேகொளுவையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் மா/இந்து மகா வித்தியாலயத்தில் சா/த வரையும் உயர் பிரிவை மாத்தளை ஸாஹிரா தேசிய பாடசாலையிலும் கற்றவர். தொழிலில் கணக்குப்பதிவாளராக லக்கல வில்கமுவ பிரதேச செயலகத்திலும், அதனை தொடர்ந்து மா/மவுசாகல த.வி, மா/கணேஸ்வரா வித்தியாலயம், மா/வேவல்மட த.வி ஆகியவற்றில் சேவையாற்றி தற்போது இறத்தோட்டை ஸ்ரீ குமரன் ஆரம்ப பாடசாலையில் அதிபராக கடமையாற்றுகிறார். பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியராக இவர் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா, மனித வள அபிவிருத்தி டிப்ளோமா (HRM) ஆகிய கற்கைகளைப் பூர்த்தி செய்து தற்போது மனவளக்கல்வியல் டிப்ளோமா (இந்தியா) பயின்று வருகின்றார். இதனை விட சிறுகதை, கவிதை, பாடலாக்கம், கட்டுரை போட்டிகளில் பல தேசிய பரிசில்கள் பெற்றுள்ளதோடு "சாயப்பட்ட விரல்கள்" என்ற கன்னிக் கவிதை தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். மத்திய மாகாண சாகித்திய விருதினையும், இந்து கலாசார அமைச்சின் "கலைச்சுடர்" விருதினையும் பெற்றுள்ளார். இவரை ஞானம், நீங்களும் எழுதலாம், பூங்காவனம், ஜீவதி ஆகிய சஞ்சிகைகள் எழுத்தாளராக அறிமுகம் செய்துள்ளன. விரைவில் ஹைக்கூ கவிதை தொகுப்பொன்றும் வெளிவர இருக்கிறது.

மாத்தளையில் மாசிமகம் மாத்தளையில் மாசிமகம்.
மாத்தளையின் மாசிமகம். ஆனது போல்
மாத்தளையில் மகத்தான மாசிமகம்.
உலகளவில் பேசப்படும் மாண்பு கொண்ட
மகத்தான மாசிமகம்.
மாத்தளையின் மாசிமகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத சிறப்புகளில் எல்லாம்
மாண்பு கண்ட மகத்தான மகிமை
மாசி மாத சிறப்புப்கோ
மாத்தளையில் மாசிமகம்
மாத்தளையின் மாசிமகம்.

கொடியேற்றம் முதல்- நம் மனங்களில்
கொலுவிருக்கும் சக்திமயம்
அதுவே நம் பக்திமயம்
நம் பயபக்திமயம்
பலநூறு கதைகள் சொல்லும்
பண்பாட்டு வெட்டுமுகம்
மாத்தளையில் மாசிமகம் நம்
கண் காணும் மாசிமகம் நம்
மண் காணும் மாசிமகம்.

இனத்தின் சாரம் கலாசாரம்
உலக இயக்க சாரம் எம்
உயர் இந்து கலாசாரம்
இதை உணர்த்தியே வழக்கமாய்
வழிப்பாடாய் வாழ்கையில் வரலறாய்
வந்து போகும் மாசிமகம் மாத்தளையின் மாசிமகம்.

வேறெங்கும் இல்லாத வேர் விட்ட மாசிமகம்
வேற்றுமை பாராது பூசித்து பூரிக்கும்
புனித பூரணையில் நம் மாத்தளையில்
புகழ் பூந்த மாசிமகம்
உள்ளம் பெருக்கை நம் உள்ளிருக்கும்
பண்பாட்டு பக்தி பெருக்கை
உணர்த்திடும் உச்சமாய் முன்னோர் தந்த
உயர்ந்த எச்சமாய் எழுந்திருக்கும்
கோபுர உச்சமாய் உலகிற்கு எடுத்து சொல்லும்
கலாசார உச்சமாய் மாத்தளையில் மாசிமகம்
மாத்தளையின் மாசிமகம்.

மாசி மாதம் என்றால் மாசிமகம்
மாசி மாதத்திற்கு மாத்தளை ஒரு மணிமகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிமக திருவிழா நம் நாட்டுகோர் பெருவிழா
மாசிமக திருவிழா பாரெங்கும் ஒரு விழா
பார்த்துக் கண்குளிர பக்தி நிறை பெருவிழா
பாரெங்கும் பார்த்திடவே பகல் இரவு
பக்குவமாய் பெண் தெய்வ தத்துவமாய்
மாத்தளையில் மாசிமகம் மகத்தான சக்திமயம்

பஞ்ச இரதம் பவணிவர வஞ்சமெல்லாம்
பறந்துப் போகும் நெஞ்சமெல்லாம்
நிறைந்து போகும் நிகர் ஒன்றுமில்லை இதற்கு
வாட்டும் புங்சமெல்லாம் வழி தெரியாதுஓடி விடும்
பக்தி நிறை நெஞ்சமெல்லாம்
சக்தி நிறை நெஞ்சமாய் சரித்திரம் படைத்திட
மாத்தளையில் மாசிமகம் மாத்தளையின் மாசிமகம்.

பக்தி கோசங்கள் விண்ணைத்தொடும்
மனித மனங்கள் உச்ச மனிதம் தொடும்
மகத்தான மாசிமக தத்துவங்கள்
மனித மனங்களில் தாலாட்டும்
மாரியம்மன் தாலாட்டும்
இனவேற்றுமைகள் இல்லாதே ஒழிந்து விடும்
பக்தி கோசம் மட்டுமே உயர உயர
பரவசமாய் விண்ணைத்தொடும்

என்ன கவிப் பாடினாலும் இயம்ப முடியாது
கண்குளிரப் பார்த்தாலே கடைசி வரை நிலைத்திருக்கும்
காலங்காலமாய் நினைவிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாத்தளை பாலா

மாத்தளையை பிறப்பிடமாக கொண்ட இவர் பெரிதாக பின்னணியை கொண்டவர் அல்ல. ஆரம்ப ஆசிரிய பணியையும்இதொழிற் சங்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டவர். 60பதுகளில் இருந்து நாடகம், கலை, இலக்கிய செயற்பாடுகளில் ஈடுப்பட்டவர். ஆரம்ப கால காந்தி சபா அமைப்பில் செயற்பட்ட திருவாளர்களாகிய ஆசிரியர்கள் பேரம்பலம், பத்மநாதன் அருணாச்சலம். திரு.திருமதி.குழந்தைவேல், ஓவியர் ரவி ஆகியோருடன் இவரும் செயற்பட்டு உள்ளார் என்பதும் குறிப்பித்தக்கது. அத்துடன் விபுலானந்த விழாக்களில் இவரது வகுப்பு நண்பன் கிருஷ்னதாசுடன் இணைந்து வில்லுபாட்டு, நாடகம் என மேடையேற்றியுள்ளார். இதில் மாத்தளை சோமு, ரஞ்சன் ஆகியோருடனும் செயலாற்றியுள்ளார். இவரது சகோதர நன்பன் திரு.மாத்தளை வடிவேலன் அவர்களுடன் இணைந்து மாத்தளை இலக்கிய வட்டத்தின் ஊடாக பல விழாக்களையும் பல பொது விடயங்கள் சம்பந்தமாகவும் செயலாற்றி வருகின்றனர். இவரது கவிதை பணி மூச்சுள்ள வரை தொடரும்.........

மலை சூழ் மாத்தளை மாநகரத்தே
மா நதியாம் மாவலி சூழ்ந்தோடு
மண்ணின் மாட்சிமை சொல்லும்
மாரி தாயே எங்கள் முத்துமாரி!

வடக்கின் வாசலாம்- எங்கள்
பண்பாடு பண்ணாமத்தே
வளம் சேர்த்திடவே
வடக்கு வாசல் அமைந்தே
வந்தமர்ந்தாய் தாயே எங்கள் முத்துமாரி.

கடல் கடந்து, காடுகள் கடந்து
மலைக்காடுகள் அழித்து- அங்கு
களணிகள் அமைத்திட
காவு கொண்ட — அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலர் தம்மை காத்து
கடந்து செல்ல- அன்று
காவலாய் நின்றாயே- எங்கள் முத்துமாரி.

சூழை நோய் எமை சூழ்ந்திட
பேதி வந்து எமை பேரிடராக்கிட
கொதித்த கொப்பிளங்கள்
கொடு நோயாய் ஆகிட
பீதி கொண்ணடோர்க்கு
பிணிகளுக்கு மருந்துண்டு என்றே
பிணி தீர்த்தாய் எங்கள் முத்துமாரி.

சகலருக்கும் சமமென்றே
சாந்தமாய் காட்சி தந்து
அருளாக அமர்ந்திருந்தாய்
சரமென வந்தோர்
சகலருக்கும் சக்தியாய் காட்சி தந்து
வீதி வலம் வந்தே- வீணருக்கும்
வினைத் தீர்த்தாய்- எங்கள் முத்துமாரி.

மொழி என்றும் இனமென்றும்
இல்லாத இடமாக்கி நின்றாய்
தஞ்சமென வந்ததோரை
தத்தெடுத்தே- தாய்மைதனை
தானமாய் வழங்கி நின்றாய்
எங்கும் ஏகாந்தமாய்
ஏற்றம் தந்த எங்கள் முத்துமாரி.

(கொடிய தாய்) கூட்டமொன்று
எமை கொன்றொழித்த தினமன்று
இருப்பு, உடமை இல்லாதொழித்தே
கலை, கலாசாரம் காணாமல் ஆக்கப்பட்டு
பாரம் பரியமாய் பவனி வந்த தேரை
பாதகன் எரியூட்டியே
பாதகம் செய்தனர்- எங்கள் முத்துமாரி.

கொடியோன் செய்த
கொடுஞ் செயலை
கொற்றவன் மறந்திடலாம்
மாட்சியை என்னவென்று
மாந்தர் அறிந்திடவே
மடிந்தான் மணி மண்டபத்தின் முன்னே
மாற்றில்லையோ? பேதமைக்கு எங்கள் முத்துமாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மாண்புறும் மாசி மகத்தாள்...



ரத்னா, கலைத்தென்றல், தேசாபிமானி,
**விஷ்வகீர்த்தி.எஸ்.கணேசன் ஆச்சாரி**
(கம்பளை)

இந்திய தமிழ்நாடு அரசு வழங்கிய கலைத்தென்றல், இலங்கை அரசு வழங்கிய சாகித்திய ரத்னா, விஷ்வகீர்த்தி தேசாபிமானி, தங்கச்சுடர், ரத்தீனம் போன்ற விருதுகளைப் பெற்றவரும், தமிழ் நாடு "தமிழ் மலர் மின்னிதழ்" தமிழ் நாடு சென்னை ஆசைத்தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் இலங்கை ஆசிரியரும், கம்பளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின் உப காரியதரிசியுமான திரு.கணேசன் ஆச்சாரிய சதீஷ் (விக்னேஸ்வரன்) அவர்களைப் பற்றிய அடியேனின் சில பார்வைகள்....இவர் கம்பளையில் பாரம்பரிய மிக்க ஓர் பொற்கொல்லர் சமூகத்தை சார்ந்தவர். தற்போது கம்பளையில் இவர்கள் பரம்பரையினர் நடாத்திய இவர்களின் பாரம்பரிய தொழிலான தங்க நகை வியாபாரத்தில் ஈடுப்பட்டிருந்தாலும் கலைத்துறைக்கும் பாரியளவிலான பங்களிப்பை ஆற்றிக்கொண்டு இருக்கின்றார். சினிமா, கதை, கவிதை சமூக ஆக்கங்கள் என பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, முகநூல் போன்ற ஊடகங்களில் இவரின் மகத்தான இலக்கிய பணியை நான் நன்கு அறிந்துள்ளேன்.

மலைநாடு கொண்ட மாதவத்தார் மலைத்துப்
போற்றும் மாத்தளையத்தாள்,நித்திலமெனும்
முத்துத்தீவகந்தனில்
ரத்தினமாய் உதித்த மாதவச்செல்வி
திருவருளாம் மழைபொழிய திகழரிய
அருந்தவச் செல்வியென துதி செய்
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்திக்கும் முத்தமிழால் திக்கெட்டும்
நின் புகழ் மணக்க பண்ணாகம் பதிகொண்ட
பரமசிவன் பத்தினியவள் நித்தம் தவம் கிடந்து
பக்தி பெருக்கோடு
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே...
பண்ணாகம் கீர்த்தி செய் பாவலர் குலமதில்
பாக்களால் தமிழாய்ந்த தமிழ்ச்செல்வி தாட்சாயனியவள்
திருக்கோயில் மருங்கிலே அருட்கோயில்கொண்ட
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே...

பெருவருளை நிதமருளி பக்தர் தமை ஆட்கொண்டு
பேறுகள் பலவும் ஈந்து
திருத்தேருக்கு பேரு கொண்ட திருவாரூருக்கு
ஈடு செய் பஞ்சரதபவனி
பண்ணாகமத்தில் மூவினங்களும் போற்றிட, ஈழநாடு
புகழ் காணும் பஞ்சரத்தவளே
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே...

சிவ பூமியாம் ஈழமணித்திருநாடு உயர் நிலமாம்
மலையான் மகள் மலையரசி குடி கொண்ட
மலையகம் வியக்கும் மாத்தளையூரில்,
பொன்னார் மேனியுடன் இடமிருந்து
பக்தர் குறைகல நித்தமும்
நல்வரம் நல்கும் ஒருபெரும் புகழுடைய
மாத்தளையூர் மாண்புரும் மாசிமகத்தாளே....

நற்றவம் வேள்வி நாற்புறம் நல்கி
நின் பொற்பாதம் தனை சிக்கெனப்பிடித்து கற்பகவள்ளியாய்
அற்புதமாகிய அருட்பெறும் சுடராய்
கருணை மாரி பொழியும் மாண்புறும் மாசிமகத்தாளே......
தகைபெரிய பண்ணாகப்பதிதனில் தனிப்பெரும் ஆட்சியுடன்,
நித்தியம் நின் நெஞ்சினிலே ஏற்ற
தும்பிகையான் திருபாதமதை கொண்டு தொழுவாருக்கு
கோலஞ்செய் துங்கக்கரிமுகத்து தூமணியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனைமுகத்தவனாய் அடியார்க்கு
அருள் பாலித்திடும் வேழமுகத்தானுடன்
வேல்விழியாளும் பவனிவரும் நந்நாளே
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே...

அகத்தியன் தமிழும் வள்ளுவன் வாக்கும்
அருணகிரி திருப்புகழும்
நக்கீரன் ஆற்றுப்படையும் புடைசூழ
தீந்தமிழால் பாமாலை சூடிக்கொண்ட
சுடர் மிகு வடிவேலன் தாயவளே
நிறை பெரிய திருக்கோலமதை அடியோர்க்கு
நேர்முக காட்சியாயருளிய,
பார் போற்றும் பார்வதி சக்தி காளி நீயே
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே...


மாசி மகந்தனில் என செப்புவோரொலி செவியுறவிலையோ
மாத்தளை மாண்பூறும் மாசிமகத்தாளே.....
காஞ்சி காணாதோர்,மதுரை அறியாதோர், காசி செல்லாதோர்
முப்பெருந்தேவியாய் மும்முகமும் ஒரு சேர நின்
திருவதனமதில் காண்போர் எத்துனையிருப்பினம் நின்
பொற்பாதமே தஞ்சமென திருத்தேர்
புகழ் மணக்கும் திருவூர் வழி வந்து
நின் துதி பாட இலவசமாய்
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே..

ஈழக்கவியர்களின் சரித்திரபுகழ் கண்டு
தென்னகமும் நாணிட அப்
பூவலர்களின் செந்நாவதனில் குடி கொண்ட
சொல்லின் செல்வியே
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே...
மலையரசன் ஈன்ற மலைமகளும்,
திருமாலவன் அகம் செய் திருமகளும்,
கலையரசி கலைமகளும் பண்ணாகம்
பதிதனில் ஒன்றாய் கலந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தரணி போற்ற திருக்கோலம் கொள் மாத்தளை
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே..
சொல்லமுதம், தெள்ளமுதம்,
சுவையமுதம் என முத்தமிழாய்
பாமாலை சூடி முத்து ரதமதில்,
இப் புவியின் வித்தாய் விளைந்த
முத்தாய்,மாத்தளை மாநகர் போற்றும்
பெருஞ்சொத்தாய் சான்றோர்
கீர்த்திசெய் வேள்வி நேர்த்தியாய் மல்கிய
மாத்தளை மாண்புறும் மாசிமகத்தாளே..
நின் பொற்பாதங்கள் நித்தமும் பற்றி
போற்றுவோம் போற்றி போற்றி...

ஆக்கம் -: ரத்னா,கலைத்தென்றல்,தேசாபிமானி,
விஷ்வகீர்த்தி, எஸ்.கணேசன் ஆச்சாரி (கம்பளை)
செயலாளர்-:
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் கம்பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு.இராமையா சேர்வை
தலைவர்



திரு.தங்கராஜ்
S.L.P.S - I
செயலாளர்



திரு.ரட்ணேஸ்வரன்
S.L.P.S - I
இணைப்பாளர்

Reg No : 638

சார்வரி வருட மாசிமகத்தை முன்னிட்டு

மாத்தளை இந்து கலாசார பேரவை

கவிஞர்கள் அம்பாளை ஆராதித்து

வெளியிடும் கவிதை தொகுதிக்கு

எம் நல்லாசிகள்.!

வாழ்க தமிழ்..!

வளர்க இலக்கிய பணி ..!

KOGILAN JEWEL WORKS (PVT) LTD
No.130/C, Main Street, Matale. Tel : 066-2230074 / 072-2038548
E-mail: kogilan55@yahoo.com

SUDHA Printers Matale 066 2226579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org